# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE AND MANAGEMENT
## (EXTERNAL DEGREE)
## PART III (4th) EXAMINATION IN BACHELOR OF ECONOMICS – 2010/11
## (AUG/SEPT 2014)
## EXEOC 4073 DEVELOPMENT PROBLEMS AND POLICIES

13 OCT 2014

எல்லா வினாக்களுக்கும் விடை தருக நேரம் - 03 மணித்தியாலங்கள்

1) (a). சர்வதேச வறுமைக்கோட்டின் அடிப்படையில் ஒரு நாட்டில் காணப்படும் முழு வறுமையை எவ்வாறு அளவிடலாம்? (04 புள்ளிகள்)

(b) வறுமைக்கோட்டு அளவீட்டின் குறைபாடுகளை வறுமை இடைவெளி எவ்வாறு நீக்குகிறது? (08 புள்ளிகள்)

(c). கினி குணகம் எவ்வாறு வருமான ஏற்றத்தாழ்வை மதிப்பிடுகிறது? (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2) (a). சனத்தொகையின் வயதுக்கட்டமைப்பு, தங்கி வாழ்வோர் சுமை என்பன விருத்தியடைந்த, விருத்தியடையாத நாடுகளிடையே எவ்வாறு வேறுபட்டுக் காணப்படுகின்றன? (04 புள்ளிகள்)

(b). அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அண்மைக் காலங்களில் பிறப்பு வீதமானது வீழ்ச்சியடைந்து செல்வதற்கான காரணங்களை விளக்குக. (08 புள்ளிகள்)

(c). 1800 ம் ஆண்டுக்கும் 2000 ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இடம்பெற்ற சனத்தொகை நிலை மாற்றத்தை வரைபடத்துடன் விளக்குக. (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3) (a). "குடித்தொகை வளர்ச்சி உண்மையில் ஒரு பிரச்சினையே இல்லை" ஆராய்க? (08 புள்ளிகள்)

(b). இலங்கையில் கல்வி கற்றோரிடையே வேலையின்மை காணப்படுவதன் பாதக விளைவுகள்ள எடுத்துக்காட்டுக. (08 புள்ளிகள்)

(c). இப்பிரச்சனையைத் தீர்க்க உமது ஆலோசனைகள் எவை?. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4) (a). ஒரு பொருளாதாரம் அபிவிருத்தியடைந்து செல்வதால் கிடைக்கக் கூடிய நன்மைகளை சுற்றுச் சூழல் பாதிப்பானது எவ்வாறு குறைத்து விடுகிறது? (04 புள்ளிகள்)

(b). வறுமைக்கும் சுற்றுச் சூழல் பாதிப்புக்கும் இடையிலான தொடர்புகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(c). சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது தொடர்பாக விருத்தியடைந்து வரும் நாடுகள் எவ்வாறான கொள்கைத் தெரிவுகளை மேற்கொள்ள முடியும்? (12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

5) பின்வருவனவற்றிற்குச் சிறகுறிப்பு தருக.

a) லோரன்ஸ் வளையி
b) சுற்றுச் சூழல் சார் கணக்கீடு
c) வளர்ந்து வரும் நாடுகளில் குழந்தைகளுக்கான கேள்வி
d) சிறுவர் தொழிலாளர் பிரச்சனை

(மொத்தம் 20 புள்ளிகள்)